# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **213/2016**

ஆணை எண். **97/2016**

நாள் : **24/05/2016**

**திரு. எஸ். பாலமுருகன்,
17/34, இருதயராஜபுரம்,
3வது வடக்குத் தெரு, – முறையீட்டு மனுதாரர்
மதுரை– 2.**

**துப்புரவு மேற்பார்வையாளர் / ஆய்வாளர்,
வார்டு 38, – எதிர் மனுதாரர்
மதுரை மாநகராட்சி,
மதுரை– 2.**

மதுரை மாநகராட்சி, இருதயராஜபுரம் 3 வது வடக்குத் தெரு, வீட்டு எண்.17/34 ல் வசிக்கும் திரு எஸ். பாலமுருகன் என்பவரின் 22.03.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 213/2016 என்ற எண்ணிட்ட புகார் மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

மதுரை மாநகராட்சி, இருதயராஜபுரம், 3வது வடக்குத் தெரு, வீட்டு எண். 17/34 ல் வசிக்கும் தினக்கூலி பணியாளர் திரு எஸ். பாலமுருகன் என்பவர், 38 வது வார்டில் பணிபுரியும் துப்புரவுப் பணி ஆய்வாளர் திரு பா. இராஜேந்திரன், துப்புரவு மேற்பார்வையாளர் திரு ஏ.எம். விஜயன் ஆகிய இருவரும் தன்னிடம் மாதா மாதம் ரூபாய் 1000/– கையூட்டுக் கோருகின்றனர் என்று இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் படி முறையீடு செய்திருந்தார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மதுரை மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்ட மனுதாரர் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்களிடம் விசாரணை மேற்கொண்டதில், மனுதாரரின் குற்றச்சாட்டில் உண்மை இல்லை என்றும், தவறான நோக்கத்துடன் கூறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் தினக்கூலியாக பணியாற்றும் மேற்படி மனுதாரரின் மனைவியை பணிக்கு காலதாமதம் இல்லாமல் வருமாறு வற்புறுத்தியதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது மனுதாரர் புகார் தெரிவித்துள்ளார் என்றும் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில் 29.04.2016 நாளிட்ட தனது கடிதத்தில் மதுரை மாநகராட்சியில் இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை தனக்குத் திருப்திகரமாக உள்ளதாகவும் எனவே தான் அனுப்பிய மனு மீது எந்த நடவடிக்கையும் தேவையில்லை என்று மனுதாரர் தெரிவித்துள்ளார். உ ரிய நேரத்தில் பணிக்கு வராத மனுதாரரின் மனைவியை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கண்டித்ததால், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் செய்துள்ளார். மனுதாரரின் இச்செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது. மேலும் தகவல் அறியும் உரிமை சட்ட ஆர்வலர்கள் முன்னேற்ற சங்கம் என்ற பெயர் விவரத் தாள் கற்றையில் (Letter pad) மனுதாரர் முறையீடு செய்தது மாநகராட்சி அலுவலர்களை மிரட்டும் வகையில் உள்ளது. மனுதாரர் மாநகராட்சியின் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வருவதாகத் தெரிகிறது மனுதாரர் எந்தச் சங்கத்திலும் உறுப்பினராக இருப்பதற்கு தடையில்லை. ஆனால் அதையே தனக்கு சாதகமாக்கி மாநகராட்சிப் பணியாளர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுகளைத் தெரிவிப்பது சரியான நடைமுறை இல்லை. உள்ளாட்சி அமைப்புகளில் நிலவும் முறைகேடுகளை தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு சட்டத்தை தவறாக பயன்படுத்துவது எவ்வகையிலும் ஏற்புடையது அல்ல. மனுதாரர் கடைநிலையில் உள்ள ஒரு பணியாளர் என்பதைக் கவனத்தில் கொண்டு இம்முறைமன்ற நடுவம் ஒழுங்கு நடவடிக்கை மனுதாரர் மீது எடுப்பதிலிருந்து முடிவை தளர்த்தி கடுமையாக எச்சரித்து ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்

பெறுநர்

**திரு. எஸ். பாலமுருகன்,**
**17/34, இருதயராஜபுரம்,**
**3வது வடக்குத் தெரு,**
**மதுரை– 2.**

நகல்

**ஆணையர் மதுரை மாநகராட்சி, மதுரை– 2.**
**திரு. பா. இராஜேந்திரன்,**
**துப்புரவு ஆய்வாளர்,**
**திரு. ஏ.எம். விஜயன், துப்புரவு மேற்பார்வையாளர்,**
**மதுரை மாநகராட்சி, மதுரை.**